
VOL. 11 | SPECIAL ISSUE 2 | JULY 2023
P-ISSN: 2321-788X | E-ISSN: 2582-0397

# Shanlax International Journal of Arts, Science and Humanities

(A Peer - Reviewed - Scholarly Indexed Quarterly Journal)



## தொகுதி - 3

தமிழ்த்துறை - தேசியக் கருத்தரங்கம்

# கிறித்தவ இலக்கியங்கள்

சி. எஸ். ஐ. தூத்துக்குடி - நாசரேத் திருமண்டலம்
போப் கல்லூரி (தன்னாட்சி பெற்றது)
Accredited by NAAC – II with "A" Grade (CGPA:3.28)
சாயர்புரம் - 628 251

பதிப்பாசிரியர்
முனைவர் ஜே.ரா. ஷேரனா லின்ஷி

INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE
PKP PUBLIC KNOWLEDGE PROJECT
OJS OPEN JOURNAL SYSTEMS
SHANLAX JOURNALS
editor@shanlaxjournals.com | www.shanlaxjournals.com

| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1 | மாணவர்களிடம் படித்தல் திறனை வளர்ப்பதில் ஆசிரியர்களின் பங்கு<br>**முனைவர் ப. லாவண்யா** | 1 |
| 2 | சங்கத்தமிழரின் உணவு முறைகள்<br>**ச. பாக்கியகனி** | 6 |
| 3 | கத்தியின்றி ரத்தமின்றி புதினத்தில் சமூக ஒடுக்குமுறை<br>**முனைவர் கு. ஜெயசித்ரா** | 11 |
| 4 | புறநானூற்றில் வாழ்வியல் அறம்<br>**ப. ஷைனி & முனைவர் தே. பெனினா** | 17 |
| 5 | கவிஞர் இரா. ரவியின் ஹைக்கூ கவிதைகள் - பெண் சமூகம்<br>**அ. மரியநேசம் & முனைவர் ச. மல்லிகா** | 22 |
| 6 | ரசிகன் நாவலில் மனிதநேயச்சிந்தனைகள்<br>**மா. மகேஸ்வரி & முனைவர் ர. செல்வலதா** | 30 |
| 7 | சிவசங்கரியின் நெருஞ்சிமுள் புதினம் காட்டும் மனித நேயம்<br>**ரூ. ரிஜோனா & முனைவர் சு. விஜயாகலைவாணி** | 36 |
| 8 | ஆறுமுகம் நாவலில் பெண்களின் நிலை<br>**க. சிரஞ்சீவி & முனைவர் ஜோ. ஜோசப்பின் ஜூலியட்** | 42 |
| 9 | புறநானூற்றில் பெருமிதம்<br>**செ. தாமரைச்செல்வி & முனைவர் ச. மல்லிகா** | 45 |
| 10 | எட்டுத்தொகை அகப்பாடல்களில் நெய்தல் நில மக்களின் வாழ்வியல்<br>**முனைவர் அ. சவரிராயம்மாள்** | 54 |
| 11 | எட்டுத்தொகை இலக்கியங்களில் நெய்தல் நில மக்களின் தொழில் வாணிபம்<br>**ஜா. பீற்றர் ராஜ் & முனைவர் தா. திருநாவுக்கரசு** | 58 |
| 12 | இன்னா நாற்பதில் யாப்பு மரபுகள்<br>**பா. ஜெயபுனிதாராஜேஸ்வரி & முனைவர் ச. மல்லிகா** | 62 |

SHANLAX
INTERNATIONAL JOURNAL OF
ARTS, SCIENCE AND HUMANITIES
editorsij@shanlaxjournals.in | www.shanlaxjournals.in

Vol. 11 Special Issue 2 July, 2023

P-ISSN: 2321-788X E-ISSN: 2582-0397

## தமிழ்த்துறை

நடத்தும்

தேசியக் கருத்தரங்கம்

# கிறித்தவ இலக்கியங்கள்

## தொகுதி - III

சி.எஸ்.ஐ. தூத்துக்குடி - நாசரேத் திருமண்டலம்

போப் கல்லூரி (தன்னாட்சி பெற்றது)

Accredited by NAAC – II with "A" Grade (CGPA: 3.28)

சாயர்புரம் - 628 251

# புறநானூற்றில் வாழ்வியல் அறம்

*ப. ஷைனி*
பதிவு எண்: 21213094022015
முனைவர் பட்ட ஆய்வாளர், முஸ்லிம் கலைக்கல்லூரி, திருவிதாங்கோடு
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

*முனைவர் தே. பெனினா*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
முஸ்லிம் கலைக்கல்லூரி, திருவிதாங்கோடு
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6431

***ஆய்வுச் சுருக்கம்***

*சங்கம் என்னும் அமைப்பின் சிறப்புக்கும், சங்கத் தமிழரின் பெருமைக்கும் சான்றளிப்பனவாகத் திகழ்பவை சங்க இலக்கியங்களாகும். அவை பழந்தமிழரின் தொன்மை, நாகரிகம் மற்றும் வாழ்வியலை எடுத்துரைப்பதோடு நற்கருத்துக்களை அறமாக வகுத்துரைக்கின்றன. சங்கச் சமூகம் அறம் தழைக்க வேண்டும் என்பதில் முனைப்புடன் செயலாற்றியது. சங்கத் தமிழிலக்கியங்கள் அறம், பொருள், இன்பம் என்பவற்றை முன்னிறுத்தி இயற்றப்பட்டன. இவற்றுள் சங்கப்புலவர்கள் அறத்திற்கே முதன்மை அளித்தனர். மனித வாழ்வின் அனைத்து நிலைப்பாடுகளிலும் அறம் வலியுறுத்தப்பட்டது. அத்தகைய அறத்தைக் குறித்து சங்கப் புறப்பாடல்களுள் ஒன்றாகிய புறநானூறு வழி “புறநானூற்றில் வாழ்வியல் அறம்” என்னும் தலைப்பின்கீழ் இக்கட்டுரையில் அறியலாம்.*

## முன்னுரை

தனிமனிதன் தன் கடமைகளைத் தவறாது செய்வது அறமாகும். பண்டைத் தமிழ் சான்றோர் அறத்தை வாழ்வியல் நெறியாகப் போற்றி வாழ்ந்தனர். மனிதன் தன் வாழ்க்கையின் பலவகை அனுபவங்களிலிருந்து அறிவு பெறுவதே சிறந்த வாழ்வியலாகும். அவ்வாழ்வியல் தூய்மையானதாக அமைய வேண்டுமெனில் மனிதன் தனக்கென ஒரு அறத்தை மேற்கொண்டு வாழவேண்டும். இம்மையிலும், மறுமையிலும் ஒருவனுக்கு சிறப்பைத் தருவது அறமாகும். அறமின்றி வாழ்க்கை அர்த்தமற்றதாகி விடுகிறது. ஒருவன் நல்லவன், தீயவன் என்பது அவனது அறத்தின் அளவுகோலைப் பொறுத்ததாகும். அத்தகைய வாழ்வியல் அறத்தை எவ்வாறு அமைத்துக் கொள்வது என்பதை நமது சங்க இலக்கியப் பேழையான புறநானூறு செம்மையுறக் கூறியுள்ளது. அதனை, புறநானூறு வழி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அறம்-சொற்பொருள் விளக்கம்**

அறம் என்பதற்குத் தமிழ் அகராதி "கடமை, நோன்பு, தருமம், கற்பு, இல்லறம், துறவறம், நல்வினை, அறநூல், அறக்கடவுள், தருமதேவதை, தீப்பயனுண்டாக்குஞ் சொல்" என்று பல பொருள் தருகின்றது. இதில் கூறப்பட்டுள்ள அனைத்துச் சொற்பொருள்களும் மனிதனின் வாழ்வோடு தொடர்புடையனவாகும்.

"அறம் என்னும் சொல் முறையே வழக்கம், நீதி, கடமை, புண்ணியம், ஈகை, அறக்கடவுள், சமயம் என்ற பல்வேறு பொருள்களிலும் வழங்கப்பட்டு வருகிறது" என்று க.த.திருநாவுக்கரசு அவர்கள் அறம் என்பதற்குப் பொருள் கூறுகின்றார். மனிதன் அறவழியிலான வாழ்க்கை வாழ்தலே தனிமனிதனுக்கும், மனித சமுதாயத்திற்கும் உயர்வைத் தரும் என்பதைக் கருத்தில் கொண்டு அனைவரும் அறவழியில் வாழ வேண்டும்.

**எட்டுத்தொகை நூல்களில் அறம்**

சங்க இலக்கியங்கள் காதலையும், வீரத்தையும் பாடுபொருளாகக் கொண்டிருந்தாலும், பெரும்பாலும் அறக்கருத்துக்களையும் அவ்விலக்கியங்கள் போற்றுகின்றன. வீரத்திற்கு முதலிடம் கொடுத்த சங்கத் தமிழர் அறத்தையும் போற்றிக் காத்தனர்.

**"அறனும் அன்றே ஆக்கமும் தேய்ம்"**

**(நற். 68)**

**"பிறர்நோயும் தம்நோய்போல் போற்றி அறன் அறிதல்"**

**(கலி. 138)**

**"திறவோர் செய்வினை அறவது ஆகும்"**

**(குறு. 247)**

**"அறம்புரி அருமறை நவின்ற நாவின்"**

**(ஐங். 387)**

**"அறன் கடைப்படாஅ வாழ்க்கையும்"**

**(அகம். 155)**

இவ்வாறு எட்டுத்தொகை நூல்கள் அறக் கருத்துகளை வெளிப்படுத்துகின்றன.

அறநூல்களில் முதன்மையான திருக்குறள் மனித சமுதாயத்தைப் பண்படுத்தத் தேவையான அறக்கருத்துக்களைக் கூறியுள்ளது. தனிமனிதனுக்குத் தேவையான அனைத்து அறங்களையும் இந்நூல்கள் வலியுறுத்துகின்றன.

**வாழ்வியல் அறம்**

வாழ்வியல் அறங்களாக ஏழைகளுக்கு உணவளித்தல், மக்களின் விருந்தோம்பல் போன்றவற்றைச் சுட்டுகின்றன இலக்கியங்கள். புறநானூற்றில் வாழ்வியல் அறமாக "உணவினைக் கொடுத்தல்" முக்கியத்துவம் பெறுகின்றது. நீரை முக்கியமாகக் கொண்டுள்ள உடம்புக் கெல்லாம், உணவைக் கொடுத்தவர் உயிர் கொடுத்தோர் ஆவர். உடல் உணவை முதலாக உடையது. உணவு என்று சொல்லப் பெறுவது நிலமும் நீரும் ஆகும். எனவே நிலத்தையும் நீரையும் இணைத்தவர் இவ்வுலகில் உடலையும் உயிரையும் தந்தவர் ஆவர் என்பதை,

**"நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்<br>உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே,<br>நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு<br>உடம்பும் உயிரும் படைத்திசி னோரே"**

**(புறம். 18)**

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

விருந்தோம்பல் பற்றிக் கூறும்போது தம்மை நாடிவரும் விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று, உண்டி முதலியவை அளித்து, மிக்க அன்போடும், ஆர்வத்தோடும் அவர்களை உபசரிப்பது இல்வாழ்வார்க்குரிய தலைச் சிறந்த பண்பாடாகப் பழந்தமிழகம் போற்றுகிறது. புறநானூற்றில் ஔவையார், அதியமான் நெடுமான் அஞ்சியைச் சிறப்பிக்கும் போது,

**"ஒருநாள் செல்லலம், இருநாள் செல்லலம்<br>பலநாள் பயின்று, பலரொடு செல்லினும்<br>தலைநாள் போன்ற விருந்தினன் மாதோ"**

**(புறம். 101)**

என்று கூறுவதிலிருந்து பலநாள், பலரோடு தொடர்ந்து சென்றாலும், அதியமான் தன்னை நாடிச் செல்பவரிடம் முதல்நாள் காட்டியது போன்று அன்பு காட்டுவான் என்பதை

அறியலாம். மேலும், வரும் விருந்தினர்க்குச் சுவையான உணவளித்து விருந்தோம்புவதே பழியற்ற வாழ்க்கை என்பதை,

**"வருநர்க்கு வரையா வசைஇல் வாழ்க்கை"**

**(புறம்.10)**

என்ற அடியில் ஊன்பொதி பசுங்குடையார் கூறுகிறார். சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி எப்பொழுதும் விருந்தினராய் வருபவர்க்கு வேண்டியதைக் குறைவு படாமல் வழங்கும் குற்றமற்ற வாழ்க்கையை உடையவர் என்பதை இதன் மூலம் அறியலாம். மேற்கூறிய கருத்துக்கள் மூலம் விருந்தோம்பல் தமிழரின் வாழ்வியல் அறமாக இருந்ததை உணரலாம்.

**மனிதநேய அறம்**

மனிதம் தொடர்புடைய பலம் வாய்ந்த குணங்களான அன்பு, கருணை, இரக்கம் மற்றும் சமூக நுண்ணறிவு ஆகியவற்றைச் சிறந்த மனிதநேயம் என்று கூறலாம். உயிரிரக்கப் பண்பு மனித நேயத்தில் முக்கிய இடம் வகிக்கிறது.

**"யாதும் ஊரே, யாவரும் கேளிர்,**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா,**
**பெரியோரை வியத்தலும் இலமே,**
**சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"**

**(புறம். 19)**

என்னும் பாடலடிகள் மனிதநேயத்தை உணர்த்துகின்றன.

**"பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்று ளெல்லாந் தலை"**

**(குறள். 322)**

என்னும் குறளின் கருத்திற்கேற்ப பெருஞ் சித்திரனார், தம் மனைவியிடம் குமணன் கொடுத்த செல்வத்தைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்று கூறுவதை,

**"இன்னோர்க்கு என்னாது, என்னொடும் சூழாது,**
**வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்,**
**எல்லோர்க்கும் கொடுமதி - மனைகிழ வோயே!"**

**(புறம் - 163)**

என்னும் பாடலடிகளில் எடுத்துரைக்கிறார். இதன் மூலம், தமக்குக் கிடைத்த பரிசுப் பொருள்களைப் பிறருக்கும் பகிர்ந்து கொடுக்கும் மனிதநேயப் பண்பு வெளிப்படுகிறது.

**கல்வி அறம்**

மனிதன்உயர்வுக்கு இன்றியமையாததாக விளங்குவது கல்வி. இதைப் பெறுவது அனைவருக்கும் அடிப்படையான உரிமையாக இருக்க வேண்டும். மனிதனின் சிந்தனை ஆற்றலைத் தட்டியெழுப்பும் கருவியாகக் கல்வி விளங்குகிறது. மனிதனை மாற்றும் சக்தி கல்விக்கு உரியதாகும். ஒருவர் கற்ற கல்வியானது அவரது ஏழு பிறவியிலும் தொடரும். அதனால் ஆசிரியருக்குத் தேவையான போது தேவையான உதவிகள் செய்து கற்கும் முறை உணர்ந்து கற்க வேண்டும். "தன் ஆசிரியரிடம் வெகுளாது, ஆசிரியரின் வெகுளிக்கும் முனியாது இருந்து கற்றல் வேண்டும். இது கற்றலுக்குரிய அறமாகும்" என்கிறார், மு.சண்முகம்பிள்ளை. கல்வி கற்று தேர்ந்த ஒருவனை அரசனும் சிறப்பு செய்வான். கல்வி, பொருளாதார சாதிய ஏற்றத் தாழ்வுகளைக் கடந்து அனைவருக்கும் பொதுவானதாக விளங்குகிறது. நால்வகைக் குலத்துள்ளும் கீழ்க்குலத்தான் ஒருவன் கற்பானாயின், கல்லாத மேற்குலத்தான் அவனக்கு ஆட்படுவான். ஏற்றத் தாழ்வுகளைக் களைவது கல்வி ஆகும். அது அனைவருக்கும் உரிமையானது. எனவே கல்வியைக் கற்று சிறப்படைதல் வேண்டும். ஒரே குடும்பத்தில் பிறந்தவருள்ளும் கற்றறிந்த சான்றோரையே கற்றவர்கள் அவையில் சிறப்பு செய்வர். கல்வியின் சிறப்பை பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்,

**"உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்,**
**பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே,**
**கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,**
**மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே"**

**(புறம். 183)**

என்ற பாடலடிகளில் உணர்த்துகின்றார். இதன் மூலம் கல்வி அறம் மேலோர், கீழோர் என்ற பாகுபாடின்றி கல்வி கற்ற அனைவரையும் உயர்வடையச் செய்ததையும், கல்வியின் சிறப்பை அக்காலத்திலேயே மக்கள் நன்கு அறிந்திருந்தனர் என்பதையும் அறியலாம்.

**ஈகை அறம்**

ஒருவர் எவ்வளவு பொருள் சேமித்து வைத்திருந்தாலும், அதனைத் தனக்கென வைத்துக்கொள்ளும் சுயநலமில்லாதவராக இருக்க வேண்டும். நிலையில்லா மனித வாழ்வில் ஒருவன் இறந்த பின்னும் அழியாமல் நிலைத்திருப்பது அவனுடைய புகழ் மட்டுமே. அத்தகைய புகழை “ஈகை” என்னும் பண்பினால் மட்டுமே பெற முடியும்.

***“மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்***
***தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே”***

***(புறம். 165)***

என்பதை புறநானூறு வலியுறுத்துகின்றது. வள்ளுவரும் ஏழைகளுக்குக் கொடுப்பதையும், அதனால் புகழ் உண்டாகும்படி வாழ்வதையும் தவிர இப்பிறவியினால் அடையக்கூடிய பயன் வேறெதுவுமில்லை என்பதை,

***“ஈத லிசைபட வாழ்தல் அதுவல்ல***
***தூதிய மில்லை உயிர்க்கு”***

***(குறள். 231)***

என்ற குறட்பாவில் குறிப்பிடுகிறார்.

பாரி மன்னனை மக்கள் அனைவரும் ஏத்திப் புகழ்ந்தனர். அப்பாரியின் வள்ளல் தன்மை மாரியை விடச் சிறந்தது. அதனால் தான் அவரை “பாரி வள்ளல்” என்கிறோம். மாரி கைம்மாறு கருதாது மக்களுக்கு மழை தந்து உதவுவது போன்று அனைவருக்கும் கொடுத்துதவும் பண்புடையவன் பாரி மன்னன். அதனால் தான் அவனது புகழ் இன்று வரை மக்களால் பேசப்பட்டு வருகிறது. இதனை,

“பாரி பாரி என்றுபல ஏத்தி,
ஒருவற் புகழ்வர், செந்நாப் புலவர்”

*(புறம். 107)*

என்னும் பாடலடிகளில் கபிலர் தெளிவுபடுத்துகிறார். ஒருவர் மறைந்த பின்னும் அவருக்கு புகழைத் தருவது அவரது ஈகையே ஆகும்.

**அரசியல் அறம்**

சங்க காலத்திலும், அதற்கு முந்தைய காலத்திலும் ஒட்டுமொத்த மனித வாழ்க்கையின் உச்சமாக மன்னர்கள் கருதப்பட்டனர். அறநெறியில் தங்களது கடமைகளைச் செய்து மக்களைக் காக்க வேண்டியது மன்னர்களின் சிறந்த அறமாக காணப்பட்டது. பலதரப்பட்ட மக்களையும் பஞ்சம், பட்டினி, பசி போன்றவற்றிலிருந்து காப்பதும், அனைவரையும் சரிசமமாக நடத்துவதும் மன்னனின் இன்றியமையாக் கடமையாகக் கொள்ளப்பட்டது.

இயற்கையாக மழைவளம் குன்றி வறுமை தோன்றும் போது, மக்களின் காவலராகிய மன்னன் பழிக்கப்படுவான் என்பதால் மக்களது வரிக்கடன்களை விலக்கி அவர்களைப் போற்றிப் பாதுகாக்கும் கடமை மன்னனுக்கு உண்டு என்பதை,

***“மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்***
***இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்***
***காவலர்ப் பழிக்கும்”***

***(புறம். 35)***

என்ற பாடலடிகள் உறுதிப்படுகின்றன. இதன் மூலம் மன்னர்கள் மக்களைக் காத்து, அறவழியில் அரசாட்சி செய்து வாழ்ந்தனர் என்பதை அறியலாம்.

**அறத்தின் சிறப்பு**

இவ்வுலகம் இன்றளவும் நிலையாக இருப்பதற்குக் காரணங்கள் எவை என்று வேண்டுவோர்க்கு அறம் செய்வோரும், அறச் சிந்தனையுடையோருமே என்பதை,

***“உண்டால் அம்மஇவ் உலகம் - இந்திரர்***
***அமிழ்தம் இயைவது ஆயினும், “இனிது”***
எனத்
***தமியர் உண்டலும் இலரே”***

***(புறம். 182)***

என்று கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி பாடியுள்ளார். அமிழ்தமே கிடைத்தாலும் தனியே உண்பதில்லை. இத்தகைய அறம் செய்து வாழும் தன்மையுடைய பெரியோர்கள் இவ்வுலகில் வாழ்வதால்தான் இவ்வுலகம் நிலைத்துள்ளது என்று அறத்தின் சிறப்பு பேசப்படுகிறது.

**"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**
**மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"**
**(குறள். 82)**

விருந்தினர் வீட்டின் வெளியே இருக்கும் போது சாவா மருந்தாகிய அமிழ்தமே கிடைத்தாலும் தனியே உண்ணல் விரும்புதற் குரியதன்று என்னும் கருத்தை முன்வைக்கிறார் வள்ளுவர். இக்கருத்திற்கு இணங்க அறவழியில் வாழ்ந்து உயர்வடைந்தவர்கள் பண்டைத் தமிழர் என்பது புறநானூறு வழி தெளிவாகிறது.

## தொகுப்புரை

புறநானூற்றுப் பாடல்கள் வாழ்வியல் அறங்களை எடுத்தோதுகின்றன. வாழ்வியலும், மனித நேயமும், ஈகைப் பண்பும் சங்கப் பாடல்களில் காட்டப்படுவது போல் எவற்றிலும் தெளிவாக காட்டப்படவில்லை. சமுதாயமும், வாழ்வும் ஒருங்கிணைந்து செல்ல அறம் முக்கியமானதாகும். அறத்தின் வழியே வாழ்க்கை பயணிக்க வேண்டும். மறந்தும் பிறருக்குத் தீங்கு செய்தல் கூடாது. இவ்வறங்களைக் கடைபிடித்து சங்ககால மக்கள் மிகவும் நேர்மையாகவும், உன்னதத் தன்மையுடனும் வாழ்ந்து வந்தனர். நெறி தவறாமல் வாழ்வதற்கு அறம் முக்கியமானதாகும். அத்தகைய அற வாழ்க்கையை பழந்தமிழர்கள் வாழ்ந்து வந்தனர். புறநானூற்றில் தமிழர்கள் வளர்த்த வாழ்வியல் அறமும், மனித நேய அறமும், கல்வி அறமும், ஈகை அரசியல் அறமும் அறநெறி அடிப்படையிலே அமைந்துள்ளன என்பது இக்கட்டுரை வழிப்புலனாகிறது.

## துணைநூற்பட்டியல்

1. கௌமாரீஸ்வரி, பதிப்பாசிரியர், கௌரா தமிழ் அகராதி, சாரதா பதிப்பகம், சென்னை, 2013.
2. கௌமாரீஸ்வரி, பதிப்பாசிரியர், திருக்குறள் பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை, 2021.
3. சண்முகம் பிள்ளை.மு, சங்கத் தமிழர் வாழ்வியல், தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 2004.
4. சுப்பிரமணியன். ச.வே, சங்க இலக்கியம், எட்டுத்தொகை அகநானூறு, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2009.
5. சுப்பிரமணியன்.ச.வே, சங்க இலக்கியம், எட்டுத்தொகை, ஐங்குறுநூறு, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2009.
6. சுப்பிரமணியன்.ச.வே, சங்க இலக்கியம், எட்டுத்தொகை, கலித்தொகை, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2009.
7. சுப்பிரமணியன்.ச.வே, சங்க இலக்கியம், எட்டுத்தொகை, குறுந்தொகை, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2009.
8. சுப்பிரமணியன்.ச.வே, சங்க இலக்கியம், எட்டுத்தொகை, நற்றிணை, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2009.
9. திருநாவுக்கரசு.க.த, திருக்குறள் நீதி இலக்கியம், திருக்குறள் ஆராய்ச்சி 2, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1977.